# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

"சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"

# ஆய்வடங்கல்

**ISC**
**2016**

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

Scanned with CamScanner

# உள்ளே...

சமயவியல் பக்கம்


1. திருவாசகம் காட்டும் சமய அனுபவம் 
கி.கந்தவேள் 1

2. சிவாகமங்கள் கூறும் ஸ்பர்சாகுதி கிரியையில் காணப்படும் சமய தத்துவ சிந்தனைகள் 
இ.கமலநாதக் குருக்கள் 8

3. ஆலய மகோற்சவக் கிரியைகளில் திருமுறைகள் 
க. கிருபாசக்தி 17

4. திருமுருகாற்றுப்படையில் சமயம் - பண்பாட்டியல் நோக்கு 
க. குணேஸ்வரன் 22

5. 'உள்ளம்கவர் கள்வன்' - ஆகம அடிப்படையிலான விளக்கம் 
எஸ்.பி. சபாரத்தினம் 31

6. பெரிய புராணத்தில் - இறையுணர்வு, கண்ணப்ப நாயனார் புராணத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 36
ஜெ.சரணியா

7. சிவாகமங்களின் அடிப்படையில், காலம், இடம், அளவு என்பவற்றின் முக்கியத்துவம் 47
ப. சிவானந்தசர்மா

8. நாயன்மார் தேவாரங்களில் ஈழத்து திருக்கேதீஸ்வரம்-தொல்லியல் வரலாற்று நோக்கு 57
எஸ். சிவச்செல்வி

9. இறைவழிபாட்டில் மலர்கள்: திருநாவுக்கரசரது தேவாரத்தை மையப்படுத்திய ஆய்வு 69
எஸ். செல்வக்குமாரி

10. பக்தியை மையப்படுத்தும் திருமுறைகள்- ஓர் ஆய்வு 
பா. தர்சிகா 78

11. திருமுறைகளில் அருளியல் 
க. நாகேஸ்வரன் 86

12. சிவாகமங்கள் கூறும் சிவலிங்க வகைகள் 
ச.பத்மநாபன் 95

13. திருமுறைகள் கூறும் திருநீற்றின் பெருமை 
க. பத்மானந்தன் 106

14. இலங்கையில் ஆகம மரபில் அமைந்த இந்து ஆலயங்களின் தோற்றம் - ஒரு மீள் வாசிப்பு 114
ப.புஷ்பரட்ணம்

15. தேவாரங்களில் திருநீறு - ஓர் ஆய்வு 
ச. மனோன்மணி 128

16. சிவாகம மரபில் யாகசாலை அமைப்பு முறையும் விளக்கமும் 
க.யாழினி 135

17. Enlivening images: The Śaiva rite of invocation based primarily on the major Śaivāgamam 147
M.Balakailasanathasarma




Scanned with CamScanner

# பக்தியை மையப்படுத்தும் திருமுறைகள்- ஓர் ஆய்வு

பா.தர்ஷிகா.

**ஆய்வுச் சுருக்கம்**

பல்லவர் காலமானது பக்தி இயக்க காலம் எனக் கூறும் வகையில் பக்தி கருப்பொருளாகக் காணப்படுகிறது. இதற்கு இக் காலத்தில் தோற்றம் பெற்ற திருமுறைகளின் வகிபங்கு பிரதானமாகக்காணப்படுகிறது. திருமுறைகள் பக்தியை மையப்படுத்தி அதனூடாக ஆன்ம விடுதலையை அடைவதை நோக்கமாகக் கொண்டிருப்பதனை வெளிக்காட்டுவதுடன் பல்வேறான கலைகளின் வளர்ச்சிக்கும் சமூக ஒருங்கிணைப்பிற்கும் பக்திமரபானது எவ்வாறு அடிநிலையாக அமைந்தது என்பதையும் ஒருங்கே வெளிப்படுத்துவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இங்கு ஆய்வு முறையியல்களாக பன்னிரு திருமுறைகளில் காணப்படும் பாடல் வரிகள் பண்புரீதியான முறையில் நோக்கப்பட்டு விபரணரீதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பல்லவர்கால பக்தி மரபை ஆராயும் வகையில் வரலாற்றுமுறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பக்தியினூடாக திருவருளை அடைவது மட்டும் நோக்கமாகக்கொள்ளாது சாதி, இன, மொழி, பால் பேதங்களும் களையப்பட்டு சமூக ஒருமைப்பாட்டிற்கும் பக்தி வழிகோலுவதாக அமைகிறது. சாதாரண மானிட வாழ்வில் பேணப்படும் தாய், தந்தை, பக்தி என்பது இறையருளுடன் மட்டும் தொடர்புறாது சாதாரண நடைமுறை வாழ்வியலின் எல்லா அம்சங்களுடனும் தொடர்புறும் ஒன்றாகவும் காணப்படுகிறது.

**திறவுச்சொற்கள் :** பக்தி, விடுதலை, சமூக ஒருமைப்பாடு

## ஆய்வு அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்கம், சங்கமருவிய காலங்களைத் தொடர்ந்து பல்லவர் காலம் காணப்படுகிறது. சங்க காலத்தில் காதலும் வீரமும் பாடுபொருட்களாகவும் சங்கமருவிய காலத்தில் அறமும் காணப்பட்டது. பல்லவர்காலமானது பக்தியை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்ற வேளை திருமுறைகளின் தோற்றம் பல்லவர் கால பக்தி நெறிக்கு ஆதார சுருதியாக அமைந்தது எனலாம். திருமுறைகளூடாகவே பக்தி வெள்ளம் பாய்ந்தோடுகிறது.

தோழன், காதலன், அடிமை போன்ற உறவு முறைகளை இறைவனுடனான ஊடாட்டத்தில் நாயன்மார்கள் தமது திருமுறைகளிற்கூடாக வெளிப்படுத்தியிருந்தனர். பக்தியின் மூலம் விடுதலையை அடைவது மட்டுமல்லாது தமிழும் இசையும், கலைநுட்பங்களும் ஒருங்கே வளர்ச்சி அடைந்துள்ளன.

"பஜ்" என்ற வேர்ச்சொல்லில் இருந்து பக்தி என்ற பதம் தோற்றம் பெற்றது. சாதாரண பாவனையில் இச் சொல்லானது பல்வேறு வகையாகப் புரிந்து கொள்ளப்படுவதால் அதனது அர்த்தம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. அதாவது அர்ப்பணிப்பு, மரியாதை, பயபக்தி, பிணைப்பு என்றவாறான கருத்துக்கள் இச்சொல்லிற்கு காணப்படுகிறது. மேலும் ஆண் - பெண் என்பவர்களிற்கு இடையேயான காதல், பெற்றோர்கள் மீது பிள்ளைகள் கொள்ளும் மரியாதை, குருவின் மீதான பயபக்தி, இசை, நாடகம், என்பவற்றுடன் கொண்டுள்ள பிணைப்பு என பல்வேறு தொடர்புகளினடிப்படையில் பக்தி என்ற சொல்லைப் பயன்படுத்தலாமெனினும்

உதவிவிரிவுரையாளர், மெய்யியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, tharsigapackijanathan@gmail.com



Scanned with CamScanner

சமயத்தில் இச்சொல்லானது அர்ப்பணிப்பு, மரியாதை, பயபக்தி, பிணைப்பு என்பவற்றையே உள்ளடக்கியிருக்கும்.[1]

சமயம்சார் கலைச் சொல்லாக பக்தி என்ற சொல் பயன்படுத்தப்படும் பொழுது, பக்தன் இறைவன் மீது கொண்ட காதல், பயபக்தி என்பனவற்றையும் அர்ப்பணிப்பையும் அச் சொல் தன் கருத்துக்குறிப்பாகப் பெறுவதால், பக்தன் இறைவனுடன் கொள்ளும் தொடர்பு எப்பொழுதும் ஆள்நிலைப்பட்ட உறவாகவே இருக்க முடியும். இதுவே பக்தியின் மிகச் சிறப்பான குணவியல்பாகும்.[2]

பல்லவர் காலத்து பக்தி நெறி ஏறழத்தாழ 300 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வெற்றி நடைபோட்டது. எண்ணற்ற தொகையினர் இவ் இயக்கத்தில் பங்குகொண்டனர். இத்தகைய சிறப்பின் காரணமாக பக்தி ரசம் காக்க பாசுரங்களாக நம்பியாண்டார் நம்பி இவற்றைத் தொகுத்து வகைப்படுத்தினர்.[3] திருமுறைகளாக வழங்கியிருந்த இப்பாசுரங்கள் பல அனைத்தும்பன்னிரு திருமுறைகளுக்குள் உள்ளடக்கப்பட்டன. இந்தவகையில்,

திருஞானசம்பந்தரது 1ம், 2ம், 3ம் திரு முறைகளும் திருநாவுக்கரசரது 4ம், 5ம், 6ம் திருமுறைகளும் சுந்தரரது 7ம் திருமுறை யையும் தேவாரங்கள் என வழங்கப் பெற்றன. மாணிக்கவாசகரது 8ம் திருமுறையாக திருவாசகமும் திருக்கோவையாரும் அதன் உள்ளடங்கலாயின. 9ம் திருமுறையில் 9 தொகை அடியார்களின் பாடல்கள் காணப்படுகின்றன. இதில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு உள்ளடக்கப்படுகிறது. 10ம் திருமுறையாக திருமூலரது திருமந்திரமும் 11வது தொகுப்பாக காரைக்கால் அம்மை யார், சேரமான்பெருமாள் உள்ளிட்ட பன்னிருவரது பாடல்களும் 12 வது திருமுறை யாக சேக்கிழாரது பெரியபுராணமும் வடி வமைக்கப்பட்டன.[4]

வைதிக மதப்பிரிவில் சைவசித்தாந்தம் பக்தியை முதன்மைப்படுத்துகிறது. ஏகாக்கிர சிந்தனையுடன் இறைவனுக்கு ஒருவன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளல் இதனால் சரணடைதல் என்றொரு கருத்தையும் பக்தி உள்ளடக்கியிருக்கிறது. பக்தியின் அதீத நிலையூடாக முத்தியை / விடுதலையைப் பெறுகின்றார். இங்கு இறைவனிடம் சரணடை தல் என்பது பயத்தினால் அல்ல அதீத நம்பிக் கையால் ஆகும்.

**பக்தியை மையப்படுத்தும் திருமுறைகள்**

வைதீக சமயங்களைப் பொறுத்தவரை பக்தி என்பது இன்மையில் இன்பமாய் வாழ்வதற்குரிய பொருள்களை இறைவனிடம் கேட்பதல்ல. அந்தப் பரம்பொருளையே விரும்பிக் கேட்பது தான் பக்தி ஆகும். பக்தியின் வகிபாகமானது வாழ்க்கையுடனும் சமயத்துடனும் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகிறது[5]. இக்கருத்தமைவை முறையே மாணிக்கவாசகரும் திருநாவுக்கரசரும் வெளிப் படுத்தியிருந்தனர்.

**மாணிக்கவாசகர்**

"யான் ஏதும் பிறப்பு அஞ்சேன் இறப்பதனுக்கு
என் கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான்
மதித்து இரேன்
தேனேயும் மலர்க் கொன்றைச்சிவனே!
எம்பெருமான் எம்
மானே! உன் அருள் பெறும் நான் என்று
என்றே வருத்துவேனே"[6]

என்றவாறாகவும்,

**திருநாவுக்கரசர்**

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டுமிவ்வையகத்தே"[7]
எனவும் பாடியுள்ளனர்.

இவ்வாறாக இறையருள் ஒன்றை மட்டுமே விரும்பும் அடியார்களுக்கு வானுலகம், சுவர்க்கம், நரகம் எல்லாமே அற்பமாகிவிடும். வெள்ளம் கரையை நாடுவதும் அடர்ந்த இருளிலே தவிப்பவன் விளக்கை நாடுவதும் போல திருவருளை நாடுவது தான் பக்தியின் மகத்துவமாகும்.

பல்லவர் காலத்தின் கருப்பொருளாக காணப்படுகின்ற பக்தியை மையப்படுத்தும் திருமுறைகள் பண்ணுடன் குழைந்த இசைப்பாடல்களாக மலர்ந்தன. இவை திருவருளை அடைவதை மட்டும் நோக்காகக் கொள்ளாது சமூகவாழ்விலும் மாற்றங்கள் பலவற்றினை ஏற்படுத்தின. சங்கமருவிய காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் எழுச்சியினால் ஒதுங்கி, ஒடுங்கியிருந்த வைதீக சமயங்கள் பல்லவர் காலத்துப் பக்தியோடு மீள் எழுச்சி கண்டன. இக்காலத்தில் கதாநாய கர்களாக நாயன்மார்கள் விளங்குகின்றனர். பல்லவர்காலத்தில் நலிந்து போயிருந்த வைதிக மதங்கள் சிறியளவில் எழுச்சியுற ஆரம்பித்தன. தமிழர் பாரம்பரிய தெய்வவழிபாட்டு முறைகளுடன் வேதபரம்பரைசார் வழிபாட்டு முறைகளும் தவிர்க்க முடியாதபடி இணைய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. தமிழ் தெய்வமான முருகனும் கொற்றவையும், புராணியத் தெய்வங்களான குமரனுடன் பார்வதியும் இணைத்துப் பேசப்பட்டு புதுப்பொலிவு பெற்றன. தமிழர் வாழ்வியலில் பிராமணர்களது தொடர்பும், ஈடுபாடும் இடம் பெறலாயின. திருக்குறள் போற்றி நின்ற அன்பும் அறனும் வைதிக வழிபாட்டு முறைகளுள் பெரியளவில் இணைவு பெற்றன. இவ்வித இணைவுகள் கற்றோர் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றன.

புராணியம் தொடர்பான சம்பவங்கள், செய்திகள் தேவார திருவாசகங்களிற் குறிப்பிடப்பட்டு கற்றோர் மத்தியில் மட்டுமாய் வேரூன்றிய வைதீகமதச் சிந்தனைகள் சாமானியர் வரையில் எடுத்துச் செல்லப்பட்டது. இந்நிலையில் இதற்காகவோர் அமைப்பியல் செயல்பாட்டின் தேவை உணரப்பட்டது. அநுபூதிமான்களும் ஞானவான்களும் தீவிரமான முறையில் செயல்பட ஆரம்பித்தனர். இந்த உணர்வுகளின் பெறுபேறே பக்தி இயக்கமாக உதயமானது இவ்விதம் அமைப்புருவெய்திய இயக்கத்திற்கு இறைதத்துவங்களையும் நடைமுறைகளையும் சாமானியர் மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஊடகமொன்று தேவைப்பட்டது அதுவே பக்திநெறியானது. பண்ணோடு பாடல்கள் இசைத்துப் பரவிப்பணியும் பக்திமார்க்கம் தெளிவானது. கிராமம் கிராமமாக பாதயாத்திரை மேற்கொண்டு இறை நாமத்தைப் பாடிப் பரவுவதுடன் சமய அனுட்டானங்களின் தேவைகளை எடுத்துரைப்பதும் இப்பக்தி இயக்கத்தின் நோக்கும் போக்குமாக அமைந்து காணப்பட்டது.

தமிழர் வரலாற்றில் சங்ககாலம் தொட்டு கலையும், இசையும் முதன்மை பெற்று விளங்கியிருந்தது. இவை நாயன்மார்களின் கவனத்திற்கு இடமானது இவர்கள் தமது தேவார திருவாசகங்களை பண்ணோடு பாடியும் மேலும் நட்டுவாங்கங்களுடன் பாடியும் பக்தி நெறியை பரப்பச் செய்தனர்.

வைதீக நெறிகளின் இறுதி இலக்காக கொண்டிருந்த பேரின்பம் பெறல் என்பதற்கு அடிப்படையாய் அமைவது அன்பாகும். இதனையே திருமூலர் "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார். அன்பையும் சிவத்தையும் வேறல்ல என்றார். அன்பே சிவம் என்றார். அன்பை வளர்ப்பதற்கு ஏனைய நெறிகளைக் காட்டிலும் பக்தி நெறியே சிறந்தது இந்தவகையில் பக்தி நெறியை மையமாகக் கொண்ட வைதிக சிந்தனைகள் வாழ்வியலிலும் - மறுமையிலும் வளம் பல பெறப் போதியவையாகக் கண்டு கொள்ளப்பட்டது. இத்தகைய சூழ்நிலையை பக்தி இயக்கம் நன்கு பயன்படுத்திக் கொண்டது. அறநெறிப்பட்ட வாழ்வை வாழ மக்களைத் தூண்டுவதன் வழியாக அவர்களது

வாழ்க்கைமுறையை அன்பின் வழியதாய் பரிணமிக்க பக்தி பெரிதும் உதவியது.

இதேமுறைமையை வைணவ ஆழ்வார்களும் பயன்படுத்திக் கொண்டனர். ஆழ்வார்களில் முதன்மையான பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் என்போருடன் 9 ஆழ்வார் களும் இணைந்து 12 பேரும் அருளிய பாசுரங்கள் நாதமுனியால் நாலாயிரதிவ்ய பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டது. திரு மாலை முதற்பொருளாகக் கொண்ட வைணவ சமயமும் தம் சமயக் கருத்துக்களைப் பரப்பு வதற்கும் மக்களைத் தம்பாற் கவர்வதற்கும் வைணவம் சார் ஆழ்வார்கள் பக்தியைப் பயன்படுத்தினார்கள்.

திருமுறைகள் பக்தியை மையப்படுத்து வதாகவே காணப்பட்டது. அரசியான மங்கையற்கரசி அம்மையார், மந்திரி சேரமான் பெருமான் போன்றவர்கள் நாயன்மார்களது பக்தி இயக்கத்தில் பங்கு பற்றினர். பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் அரச சார்புடை யோரது அனுசரணை மிகப்பலத்தை அளித்தது எனலாம்.

பக்தியுடன் மொழிப்பற்றினை இணைந்து திருமுறைகள் மலர்ந்தன. மொழிப்பற்றானது எக்காலத்திற்கும் எத் தேசத்திற்கும் எச் சமூகத்திற்கும் உரியதோர் இயல்புணர்வாகும். மக்களை ஒன்றுகூட்ட எழுச்சியூட்ட மொழி யுணர்வு சிறந்த ஓர் சாதனமாகும். திருமுறைகள் மூலம் பக்தியைப் பரப்ப மொழி என்பது ஓர் ஊடகமாக மையப்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் தாய் மொழியான தமிழை பக்தி இயக்கத்தின் பிரச்சார மொழியாக நாயன்மார்கள் பயன்படுத்திக் கொண்டனர். இந்த வகையில் எண்ணற்றதாக தேவாரங்கள் தமிழ்மொழியிலே மலர்ந்தன. சாமானியர்களது மொழி வழி வந்த பாடல்கள் அவர்களைக் கவரவும் அவர்களது பங்களிப்பை கூடுதலாகப் பெறவும் உதவியது.

இப்பக்தி இயக்கத்தில் இளைஞர், முதியோர், பெண்கள், வேளாளர், பிராமணர்கள், தாழ்த்தப்பட்டோர் என அனைத்துத் தரப்பினரும் பங்குபற்றினர். இங்கு பக்தி முனைப்புப் பெற்றதே தவிர சாதிப்பாகுபாடு, வயது வேறுபாடு, ஆண் பெண் பாகுபாடு, பிற பேதங்கள் தோற்றுப் போயின. ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல மங்கையற்கரசியார், திலகவதியார் போன்ற பெண்கள் மிக ஈடுபாடு கொண்டியங்கினர். பார்ப்பனர் சமூகத்தவர் பண் இசைக்க, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் பக்கவாத்தியம் இசைக்க இசைவெள்ளம் புரண்டோடியது. சமபந்தி சமபோசனம் நிகழும் நிலைப் பாடுகள் காணப்பட்டன. இந்தவகையில் சமயக்கருத்துக்கள் மட்டுமல்லாது சமுதாயம் சார் கருத்துக்களிலும் பக்தி இயக்கம் வியத் தகு மாற்றங்களை ஏற்படுத்தியது. அதாவது இங்கு பக்தி என்ற நெறியின் ஊடாக சமுதாய சீர்திருத்தத்தையும் சமுதாய ஒருங்கிணைப் பையும் வெளிப்படுத்தினர் எனலாம்.[8]

மனித வாழ்வில் காணப்படுவது போன்ற இணைப்பு பிணைப்பு உறவுமுறைகள் இறைவ னோடும் பேணப்பட்டது. உதாரணமாக -

"அம்மை நீ அப்பன் நீ..."[9]

"தாயினும் நல்ல தலைவன்"[10]

இங்கு தாய்... தந்தை... காதலன் ...காதலி... தோழமை.. பிள்ளை... அடிமை... நட்பு என பல வகையான வகிபங்கு இறைவனுடனான உறவுநிலையில் நாயன்மார்களது திருமுறைகளூ டாக வெளிப்படுத்தப்பட்டன. இந்த வகை யில் பக்தி என்பது மனித வாழ்வியலூடாக புரிந்து கொள்ளக் கூடியவாறு முன்மொழி யப்பட்டதோர் செயல்முறை எனலாம்.

சமய ஏற்பாடுகள் சமய அனுட்டானங்கள் நின்று நிலைபெற இயற்கை இகந்த சில செயற்பாடுகளை நிகழ்த்துவித்துக் காட்ட வேண்டிய தேவையுண்டு. இந்தவகையில் அற்புதங்கள் முதன்மை பெற்றன. பதிகங் களைப் பாடி நிகழ்த்தப்பட்டன. உதாரண



Scanned with CamScanner

மாக சம்பந்தர் தேவாரங்கள் பல பாடி அற்புதங்களைச் செய்தார். மந்திரமாவது நீறு என திருநீற்றுப் பதிகம் பாடி கூன்பாண்டியனது வெப்பு நோய் நீக்கினார். தேவாரம்பாடி சமணர்களிடையே அனல்வாதம், புனல் வாதத்தில் வெற்றி பெற்றார். ஒரு சிலரைத்தவிர சகல சமயங்கள் அனைத்தும் இந்த யுத்தியைக் கையாண்டனர்.

சங்க காலத்தில் காணப்பட்ட கலைத்துறை பல்லவர் காலத்தில் கவினுறு நிலையை அடைந்தது எனலாம். சங்ககால விறலிகள் போர்க்களத்திலும் அரசர்கள் முன் வெகுமதி பெறுவதற்காகவும் பாடியிருந்தார்கள். சங்க காலத்தில் பரத்தையர் ஒழுக்கம் மேலோங்கி குடும்பங்கள் சீர்குலைந்து பெண்கள் இரண்டாம் தர பிரஜையாக மதிக்கப்பட்டார்கள். இவர்களது ஆடல் பாடல்கள் ஆடவர்களைக் கவர்வதற்காக காணப்பட்டது. ஆனால் பல்லவர் காலத்தில் இப்பெண்கள் தெய்வீக அந்தஸ்து பெற்று ஆலயங்களில் உயர்வாக மதிக்கப்பட்டது மட்டுமல்லாது ஆலயக்கட்டடச்சிற்பமாகவும் பொறிக்கப்பட்டார்கள். உதாரணமாக சம்பந்தர் பதிகத்தில்.

“காரிகையார் பண்பாட சேயிழையார் நடமாடும்
திருவையாறே...”

என நடன மாந்தர் உயர்வாக மதிக்கப்பட்டனர்.

இந்த வகையில் பக்தியின் வெளிப்பாட்டால் கலைகள் மட்டும் அல்ல சங்க மருவிய காலத்தில் ஆன்மவிடுதலைக்குத் தடையாகக்கருதப்பட்ட பெண்களும் பல்லவர் கால பக்தியால் உயர்வாக மதிக்கப்பட்டனர். அவர்கள் வாழ்வின் அங்க மாயிருந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தைப் போற்றித்துதித்த திருமுறைகள் பெண்களின் உயர்விற்கு வழிகோலின. சுந்தரர் பரவையார் எனும் பெண்ணை நாட்டியப்பெண்ணை மணம்முடித்து அதன் வழியாக கலையையும் கலையுடன் தொடர்புடைய பெண்களும் உயர்வாக மதிக்கப்பட்டனர். தேவதாசிகளது உருவம் கோவில்களில் சிலைகளாக வடிக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் கோயில்களே கலைக்கூடமாக திகழ்கின்றன. ருத்திர கணிகையர் தேவதாசிகள் என அழைக்கப்பட்டனர்.

பக்தி நெறி பாய்ந்தோடிய பல்லவர் காலத்திலேயே பக்தியால் நிறைவு பெற வேண்டிய மனித உள்ளம் ஈனக்கவலையால் துன்புறுவதைக் கண்டு ஞானசம்பந்தர் “நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்று நின்ற யராதே” என்று தேற்றி உய்யும் வழிகூறுகிறார். எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஊழ் வலிமிக்கதாக உள்ளதே என நலிவோருக்கு பக்தி எல்லாத் தடைகளையும் நீக்கி நன்மை பயக்கும். ஆகவே “பக்தி செய்மின்” எனப் பாடுகிறார். மனித ஆளுமை வளர்ச்சிக்கு பக்தி ஆணிவேராக அமைகிறது.

பக்தியால் துன்பங்களை, இடர்களை அகற்ற முடியும் என்பதையும் திருமுறைகள் மூலம் நாயன்மார்கள் வெளிப்படுத்தியுள்ளனர். உதாரணமாக திருநாவுக்கரசர் “கூற்றாயின வாறுவிலக்க கலீர்...”[11] என்ற முதற்பதிகம் பாடி தனது வயிற்று வலியை நீக்கிக் கொண்டார். கடலிலே கல்லுடன்பிணைக்கப்பட்ட போதும் இவர் “நற்றுணையாவது நமச்சிவாயவே”[12] என பதிகம் பாடி தெப்பமாக மிதந்தார்.

பக்தியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த போது குறித்த அப்பிரதேச மக்களை மையப்படுத்தியதோடு மட்டுமல்லாது அவர்கள் வாழ்ந்த நிலப்பரப்பின் வனப்பையும், வளத்தையும் கவனத்தில் எடுக்கத்தவறவில்லை. பிரதேசத்தின் இயற்கை வனப்பையும், வரலாற்றுச் சிறப்பையும் மண்வளத்தையும் புகழ்ந்து பாடி மக்கள் மொழி, பிரதேசம், சமயம் என்கிற ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளாய் உருவாக்கினர். சோலை, மலை, காடு, வயல், ஆறு போன்ற பிரதேசங்கள் இறைவனுக்கு உவப்பானவை என்றும், எனவே இவ் இடங்களில் இறையுறையும் கோவில்களை அமைத்து மக்களும் அங்கு குடியேறி இயல்பாகக்



Scanned with CamScanner

காணப்பட்ட நீர்வளத்தை, நிலவளத்தைப் பயன்படுத்தி வாழ்வியலிலும் செழிப்புற்று இருக்க மறைமுகமாக பக்தி இயக்கத்தினர் வழி செய்தனர். வளம்மிக்க வாழ்விடத்தை தேடி வழங்கும் பணியையும் பக்தி இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

"குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை யமர்ந்தாரே.."[13]

என தம் அகக்கண்ணால் திருக்கேதீஸ்வரத்தையும், கோணேஸ்வரத்தையும் கண்டு பக்தி இயக்கத்தையும் சென்று சைவமும் தமிழும் கடல் கடந்து செழிப்புற்று விளங்க விரும்பி உழைத்தனர்.

சமயக்கருத்துக்களும் சமய நடைமுறைகளும் இசையோடிசைந்த பாசுரங்களாகி மக்களின் மனதினை நிறைத்தன. சிந்தனையைச் சீர்செய்து சைவத்தின் பால் திருப்பின. களிப்புடன் பாடும் பாடல் நெஞ்சில் நெடிய தைப்பினை ஏற்படுத்தின. இசையின் மகத்துவத்தை,

"இசை கற்று வல்லார்
இசை குலவுமாறு வல்லார்
.இசை பத்திமையாற் பாடுதலும்"

என இசையின் மகத்துவத்தை தனது தேவாரங்களில் கூறிப் புகழ்ந்துள்ளார்.[14] சுந்தரர் தனது தேவார அடி ஒன்றில்

"ஏழிசை யின்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்"[15]

என்றும், அப்பர் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"[16] என்பதும் தமிழும் இசையும் பக்தியும் பிரிவற்ற இணைவானவை என்பது புலப்படும்.

நாயன்மார்களது பதிகங்கள் அனைத்திலும் புராணங்களை ஆதாரமாகக் கொண்டே சிவனது வருணனைகளும் ஐதீகங்களும் புனையப்பட்டுள்ளன. இது தொடர்பாகக் கலித்தொகையில் சிவநடனம் பற்றி வருகின்ற குறிப்பில் திரிபுரத்தை எரித்த ஐதீகத்துடன் இணைக்கப்பட்டு இக்குறிப்பு வருகிறது.

சங்க மருவிய காலத்தில் துறவு மேலோங்கியது ஆனால் பல்லவர் காலத்தில் துறவு மறுக்கப்பட்டு இல்லறத்தின் மூலமாக இறைவனை அடைதல் என்ற எண்ணக்கரு காணப்பட்டது. இதனையே சம்பந்தரின் "பெண்ணினில் நல்லாளொடு" என்ற கருத்தில் இருந்து

"மண்ணினில் நல்ல வண்ணம் வாழலாம் ..."[17]

என்ற கருத்தமைவு உணர்த்தி நிற்கிறது.

நாயன்மார்கள் பக்தியை பரகதி அடைவதற்கான மார்க்கமாக மட்டுமாகக் கொள்ளவில்லை வாழ்வியலுக்குமோர் ஒழுங்கமைவை நல்கும் உன்னத நெறியாகவும் கண்டு கொண்டனர். ஒழுங்கு பேணுதல் வழியாக அன்பு பிரவாகப்படும் அன்பு மேம்பட்ட நிலை பக்தியாகப் பரிணமிக்கும் அறஒழுக்கம் ஓங்கி நிற்கும். வாழ்வு அன்பின் வழியதாய் அமையும் இந்த வகையில் அன்பின் வழியதாக பக்தி மார்க்கம் வற்புறுத்துகிறது.

"முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்தி நெறியறிவித்து பழவினைகள்
பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் அருளிய வாறார்
பெறுவாரச்சோவே"[18]

மேற்குறித்த செய்யுளின் ஊடாக சிவபெருமானே ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியாக பக்தி நெறியை அறிவித்தான் என்பது பெறப்படுவது. பக்தியின் முதன்மையை அருணகிரிநாதர் பின்வருமாறு விளக்குகிறார் பக்தியோடு பாடுகின்ற போது முக்தி கிடைக்கப்பெறும் என்கிறார்.[19]

"பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கருவாயே"

என பக்தி செலுத்துதலில் உளமும் உடலும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். மனமொழி மெய்யால் பக்தி நிலைப்படுத்தப்படும் போது அப்பக்தி பரகதியை அடையவழி செய்யும்.

தேவார திருவாசகங்கள் பக்தியின் இருப்பு, இயல்பு, போன்றவற்றை வெளிப்படுத்துகிறது.

இந்த வகையில் பக்தியை மையப்படுத்திய தாக திருமுறைகள் அமைந்து காணப்படுகிறது. பக்தியின் மூலமே ஆன்ம விடுதலை சாத்திய மாகும் என்பதும் இவர்களது நிலைப்பாடு ஆகும்.

இப்பக்தியினை பரப்புவதற்கு நட்டுவாங் கம், ராகம், நெஞ்சைத் தொடும் காட்சிகள், உறவுமுறைகள், பழக்கவழங்கங்கள், புராணச் சம்பவங்கள், பழமையைப் புதுப்பித்தல் போன்றன உறு துணையாக அமைந்தன. சங்ககால மானிட க்காதல் பல்லவர் காலத்தில் தெய்வீகக் காதலாக மாறியது. அரச வீரம் அற்புதமாக மாறியது. இயற்கை சூழல் தெய்வீக சூழலாக மாறியது.

பக்தியால் விடுதலையை அடைவதற்காக மட்டுமல்லாது மேலும் ஓர் இனத்தின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் மேலோங்கச் செய்தது.

**நிறைவுரை**

திருமுறைகள் பக்தியை மையப்படுத்திக் காணப்பட்டாலும் பக்தியைப்பரப்புவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது இப் பக்தியின் மூலம் பால், வயது, சாதி, தொழில் என்ற பாகுபாட்டையும் கடந்து ஓர் சமுதாய நல்லிணக்கத்திற்கும் வழிகோலியது. பக்தி என்பது இறையருளை மட்டும் கருதாது சாதாரண நடைமுறை வாழ்வியலின் எல்லாப் பகுதிகளுடனும் தலைப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது.

**அடிக்குறிப்புகள்**

1. கிருஷ்ணராஜா, சோ., (1997), **தமிழின் முதலாவது பக்தியும் சைவசித்தாந்தத்தின் பிறப்பும்**, ப. 81.
2. சிவானந்தமூர்த்தி, க., (2014), **சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல்** , பக். 214.
3. https://vpoompalani05.wordpress.com.
4. Markhttp://ezilnila.com/saivam.
5. http://vpoompalani05.blogspot.in/.
6. **திருவாசகம்**. திருச்சதகம்,பா.12.
7. இரத்தினசிங்கம், சி.,(1992), **இளைய தலைமுறையினருக்கு பன்னிரு திருமுறைகள் திரட்டு** , திருநாவுக்கரசர் தேவாரம், 18:5078.
8. சிவானந்தமூர்த்தி க., மு.கு நூல்., பக்.216.
9. இரத்தினசிங்கம், சி.,மு.கு.நூல், திருநாவுக்கரசர் தேவாரம், 09:7173.
10. மேலது, திருஞானசம்பந்தர் தேவாரம் ,123:4125.
11. மேலது, திருநாவுக்கரசர் தேவாரம் , 01:4159.
12. மேலது, 11:4262.
13. மேலது, திருஞானசம்பந்தர் தேவாரம், 123:4121.
14. சிவானந்தமூர்த்தி, க., மு.கு. நூ, ப.229.
15. வெள்ளைவாரணன்., (2008), **பன்னிருதிருமுறை வரலாறு** , சுந்தரர் தேவாரம், 100:10.
16. இரத்தினசிங்கம், சி., மு.கு.நூல், திருநாவுக்கரசர் தேவாரம், 1:4164.
17. சிவானந்தமூர்த்தி, க., மு.கு. நூல், ப-230.
18. திருவாசகம், அச்சோப்பதிகம், பா. 01.
19. சிவானந்தமூர்த்தி, க., மு.கு .நூல், ப.215.



Scanned with CamScanner

**உசாத்துணை நூற் பட்டியல்**

இரத்தினசிங்கம், சி.,(1992), **இளைய தலைமுறையினருக்கு பன்னிரு திருமுறைகள் திரட்டு**, மணிமேகலை பிரசுரம், சென்னை.

கிருஷ்ணராஜா, சோ., (1997), **தமிழின் முதலாவது பக்தியும் சைவசித்தாந்தத்தின் பிறப்பும்**, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.

சிவானந்தமூர்த்தி, க., (2014), **சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல்** , அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்.

சுப்பிரமணிய பிள்ளை, கா., (1953), மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், இரத்தினநாயகம் சன்ஸ், சென்னை.

வெள்ளைவாரணன்., (2008), **பன்னிருதிருமுறை வரலாறு**, சாரதா பதிப்பகம், சென்னை.



Scanned with CamScanner